

# என்பா நூறு

தாமரைத்தீவான்

15-06-1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பா நூறு!

15-06-92

## என் உரை

நான் நூலாக வெளியிட வைத்திருந்த ஆக்கங்களில் 'வெண்பா நூறும்' ஒன்றாகும். 1955ம் ஆண்டிலிருந்து எழுதப்பட்ட வெண்பாக்களில் நூலைத்தொகுத்து வைத்திருந்தேன். பல சுதந்திரன்-சுடரிலில் வெளி வந்தவையுமுண்டு. கடந்த 1990 வன்செயலால் எல்லாமே அழிந்தொழிந்தன. நினைவில் நின்ற சிலவற்றுடன், பலவற்றை நினைவுக்குவர வைத்தும், ஒரு சில புதியவற்றையும் (90இன் பின் உள்ளவை) சேர்த்துப் பழையபடி தொகுத்தெடுத்துள்ளேன். ஆக்கப்பெயரை 'என்பாநூறு' என மாற்றியுள்ளேன். இதிற் பலதரப்பட்டவைகளும் வாழ்க்கை அனுபவங்களாகவும், நகைச்சுவைகளாகவும், கற்பனைகளாகவும் காணப்படலாம்? கற்றோர் புரிந்து கொண்டு விமர்சிக்கலாம்? பழையவற்றோடும் ஒப்பீடு செய்யலாம். விளங்காதோர் விட்டுவிடலாம், நிந்தாஸ்துதிபோல் திட்டியும் பார்க்கலாம் இப்போதைய நிலையில் 'ஓடும் செம்பொனும் ஒக்கவே' நோக்குவேன். வெளிவருவதுதான் எப்போதோ-எப்படியோ தெரியேன்?

நன்றி

A. KUGAN
72. 2nd LANE
ANANDA PURI
TRINCO

*'தாமரைத்தீவான்'*
*சோ. இராசேந்திரம்,*
*ஈச்சந்தீவு,*
*கிண்ணியா.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்பா நூறு


| பொருள் | பக்கம் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 1. காப்பாளர் | 1 | 29. சாறு | 6 |
| 2. புனைபெயர் | ” | 30. கீரை | 7 |
| 3. நிலை | ” | 31. தும்பை | ” |
| 4. தீவு | ” | 32. கானாந்தி | ” |
| 5. வில் | 2 | 33. திராய் | ” |
| 6. வெம்பு | ” | 34. குறிஞ்சா | ” |
| 7. இடம் | ” | 35. பொரியல் | 8 |
| 8. காடு | ” | 36. சோயா | ” |
| 9. மணல் | ” | 37. வள்ளி | ” |
| 10. வயல் | 3 | 38. தூதுவளை | ” |
| 11. தாம்பூலம் | ” | 39. மச்சம் | ” |
| 12. ஐந்து | ” | 40. சைவம் | 9 |
| 13. அக்காலம் | ” | 41. விரதம் | ” |
| 14. கலை | ” | 42. சொட்டு | ” |
| 15. ஊசல் | 4 | 43. சுள்ளி | ” |
| 16. பெண்கள் | ” | 44. வளவு | ” |
| 17. பேய் | ” | 45. ஓட்டை | 10 |
| 18. கூலி | ” | 46. கரையல் | ” |
| 19. பழம் | ” | 47. கல்லு | ” |
| 20. மலர் | 5 | 48. துணைவி | ” |
| 21. நாகரிகம் | ” | 49. வாய்ச்சி | ” |
| 22. காட்டு | ” | 50. பிட்டு | 11 |
| 23. சாமோ | ” | 51. தாய் | ” |
| 24. சிலை | ” | 52. ஆவி | ” |
| 25. தூசு | 6 | 53. சிவன் | ” |
| 26. வேண்டாம் | ” | 54. எலி | ” |
| 27. குப்பை | ” | 55. நொடி | 12 |
| 28. அகத்தி | ” | 56. விநாயகர் | ” |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பொருள் | பக்கம் |
|---|---|
| 57. முருகன் | ” |
| 58. கூட்டம் | ” |
| 59. சிறை | ” |
| 60. குறவன் | 13 |
| 61. சாமி | ” |
| 62. குடும்பம் | ” |
| 63. அறிவு | ” |
| 64. பணம் | ” |
| 65. குழுமாடு | 14. |
| 66. வெப்பம் | ” |
| 67. தெங்கு | ” |
| 68. சிலேடை | ” |
| 69. வீரம் | ” |
| 70. பூப்பெண் | 15. |
| 71. கவிதை | ” |
| 72. ஈடிலி | ” |
| 73. பொங்கல் | ” |
| 74. பணி | ” |
| 75. மலை | 16 |
| 76. குன்று | ” |
| 77. வானா – ஆனா | ” |
| 78. அண்ணா | ” |
| 79. கவிராயர் | ” |
| 80. பெருமாள் | 17 |
| 81. குடிசை | ” |
| 82. தமிழன் | ” |
| 83. கடன் | ” |
| 84. போர் | ” |

| பொருள் | பக்கம் |
|---|---|
| 85. ஊர்க்கவி | 18 |
| 86. ஆசிரியன் | ” |
| 87. வாத்தி | ” |
| 88. சட்டம்பி | ” |
| 89. மண் | ” |
| 90. புயல் | 19 |
| 91. நரன் | ” |
| 92. கலப்பு | ” |
| 93. வாழ்வா? | ” |
| 94. உரிமை | ” |
| 95. சிறை | 20. |
| 96. குறள் | ” |
| 97. கலைஞர் | ” |
| 98. இரட்டையர் | ” |
| 99. பன்னீர் | ” |
| 100. மந்திரம் | 21 |


வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பா நாறு!

## (காப்பாளர்)

1. தாமரைவில்லிருந்து தனியாகவே வந்து
நாமிருக்குமீச்சை நடுத்தீவில்-சேமமுற
வேப்பையடிச் சந்தி வீட்டில் அமர்ந்துள்ள
காப்பாளர் பிள்ளையார் காண்!

## (புனைபெயர்)

2. பிறந்தஇடம் தாமரைவில்! பிறகுவளர்ந்தஇடம்
சிறந்ததமிழுடையீச் சந்தீவு! - மறந்ததிலை!
எனவேதான் தாமரைத்தீ வானாய் எழுதுகிறேன்!
புனைபெயருக்கிதுவே பொருள்!

## (நிலை)

3. பந்தம் பிடித்துப் பழக்கமிலை! ஆதலினால்
இந்தநிலையில் இருக்கின்றேன்!-செந்தமிழைக்
கற்றதினால் இந்தக் கணக்காயர் வேலையினைப்
பெற்றேன் இதுவும் பிழை!

## (தீவு)

4. சீற்றீச்சை எங்குஞ் செறிந்துளதாலுஞ்சூழ
அற்றுப் பெருகிடுமாறுளதாலும்-முற்றுணர்ந்தே
இன்னவிதத்தால் இஃதீச்சந்தீவென்றே
முன்னோர் மொழிந்தார் மொழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (வில்)

5. மெல்லிதழ்த் தாமரைகள் மிகுந்துசெறிந்துளதோர்
வில்வளைவுப்பொய்கை விளங்குவதால்-சொல்வல்லார்
தாமரைவில் என்றே சாற்றியுளார் தண்டமிழில்
ஆமதுவே ஆராய்ந்தறி!

## (வெம்பு)

6. 'வன்னியனார்' வெம்பின் வடிவழகுசொல்லிவரக்
கன்னித்தமிழ் வார்த்தை காணாதே! - என்னமணல்?
முல்லை, உடன்பாலை! முன்நெய்தல், பின்மருதம்
இல்லையதற்கேதும் இணை!

## (இடம்)

7. உப்பாறு, கண்டலடி ஊற்றுக்கு முன்னாலே
தப்பாதிருப்பதுவே தாமரைவில்!-எப்போதும்
காயும்தொடுநிழலும் கனியும் தருஞ்சோலை!
பாயும் புனலுமோர் பால்!

## (காடு)

8. எங்கும் வரப்புமயம்! ஏராளமானவயல்!
தங்கும் மழைநீர் தவறாமல்! -சிங்காரச்
செந்நெற்கதிர்கொண்டே சீராய் வரவேற்கும்
கன்னல் விளைகண்டற்காடு!

## (மணல்)

9. வெண்சீனி அள்ளியே வீசினாற்போலுமணல்!
கண்காணும்வைக்கின்ற கால் புதையும்! - பண்ணோடும்
பாடும் பறவையெலாம் பழம் ஆய்வு செய்திடவே
தேடிவரும் ஈச்சந்தீவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (வயல்)

10. பச்சைக்கடலாகும் பயிரெல்லாம்! வாடையினால்
இச்சைகிளப்பும் எழிலலைகள்!-உச்சியிலே
பாடிவரும் வானம்பாடி! பருந்ததன்மேல்
ஆடிவரும் அழகே அது!

## (தாம்பூலம்)

11. மூளைகுளிரும்! முகமலர்ச்சி உண்டாகும்!
காளைபோற் கட்டுடலைக்காட்டும்!-பேழையினில்
வெற்றிலையும் பாக்கும் வெண்மைதரு சுண்ணாம்பும்
சற்றுவைத்துண்டபின்தான்!

## (ஐந்து)

12. ஆசியா வைரோப்பா அமெரிக்கா வாபிரிக்கா
மாசிலவுஸ்ரேலியோ டைகண்டம்!-பேசிலிந்தும்
உத்தரமும் தட்சிணமும் உயர்ந்த பசுபிக்கோ
டத்திலந்து மைந்தாழியாம்!

## (அக்காலம்)

13. சுண்டுவில் கட்டிச் சுட்டசெங்கல்லுடைத்துக்
கொண்டுதிரிந்து குருவிகளைக் - கண்டவுடன்
கொன்றோ மிறைச்சியினைக் கொள்ளிநெருப்பிட்டுத்
தின்றோமக்காலம் தினம்!

## (கலை)

14. அந்தியிலே தோழர் அழைத்துப் போய்க்கைமீதில்
நந்தியாவட்டையின் நல்லரும்பு - சிந்தும்பால்
கொண்டே படந்தீட்டிக் கொடுத்த கரிநிறத்தில்
கண்டோமோர் இன்பக் கலை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஊசல்)

15. பயற்றங்கூழ் காய்ச்சிப் பருகிப் புளியையிலே
கயிற்றூசல் கட்டிக்கதைபேசி - வயிற்றருகே
கூசும் படிப்புளியங் கொப்பருகே போய்வருமே
வீசிநாம் ஆடும் விதம்!

## (பெண்கள்)

16. புலியை முறங்காட்டிப் போகவைத்த பெண்பாலார்
எலியாயிருக்கின்றார் இப்போது!-வலிவில்லை!
வேலிச்சருகிருட்டில் வெள்ளெலியொன்றோடிடினும்
தாலியினிற்கைவைப்பார் தாம்!

## (பேய்)

17. நோயென்றறிந்தன்று நுட்பமருந்துண்டார்!
பேயென்றிருந்தாடிப் பெருமருந்துக் - காயெல்லாம்
வெட்டியெறிகின்றார்! வெண்ணூலை-செந்தகட்டைக்
கட்டுகிறார் இப்பொழுது காண்!

## (கூலி)

18. முத்தும், பவளமும், முழுமதிபோல் துகிலும்
கத்துகடல்மீதே கலமோட்டி-எத்திக்கும்
கொண்டோடி விற்றவனைக் கூலிக்குக் கல்லுடைக்கக்
கண்டுகலங்காதிடுமோகண்?

## (பழம்)

19. பச்சை இயல்! சிவப்போ பழகுமிசை! கருமை
இச்சையினைக் கிளறு மெழிற்கூத்து!-அச்சான
முந்நிறமும் முவ்வடிவும் முத்தமிழாய்க் கொண்டதுவே
பன்னிறத்து 'ஈச்சம் பழம்'!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (மலர்)

20 இன்றுலக மாதர் எழிலில், இயல்புதனில்
அன்றலர்ந்த ரோசாமலரனையர்!-என்றாலும்
இல்லையேல் முட்காவல் எளிதில் கசங்கிடுவர்,
தொல்லைபல உண்டென்று சொல்.

## (நாகரிகம்)

21. தாலாட்டு என்னவிலை? சமையல் நிறம் என்ன?
பாலூட்டல் எம்முறையில்? பண்புகளேன்? - மேலுலக
நாகரிகம் பாராய் நரனே எனுமாப்போல்
போகுமது பெண்ணுருவா போ!

## (காட்டு)

22. முத்தந்தரவில்லை என்றா ஓர்மூலையிற் போய்ச்
சித்தந்தளர்வுற்றாய் என்தேனே?-அத்தானை
என்னென்று எண்ணினாய் எங்கே உன் கண்ணாடிக்
கன்னத்தை என்பக்கம் காட்டு!

## (சாமோ?)

23. சங்கத்தமிழிருக்கத் தமிழெங்கள் நெஞ்சிருக்கப்
பொங்கும் உணர்வு பொலிந்திருக்க-அங்குள்ள
பேர் ஊர்ப்பலகையிலே பேதையரே தமிழின்மேல்
தார்பூசிற்சாமோ தமிழ்?

## (சிலை)

24. வேர்வை பெருகிடவே வெய்யிலென்றும் பாராமல்
ஆர்வமுடன் வீடுற்றேன் அந்நேரம் - பார்வையினால்
எரித்தாளே காதல் எனுந்தீ கொளுத்திப் பின்
சிரித்தாளே அந்தச்சிலை!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (தூசு)

25. என்றோவிரைவினிலெம் ஈழத்தமிழகத்தை
நன்றாகக் காண்பதெனநாமெல்லாம்-இன்றிருந்தே
எல்லாத்துறையும் உழைப்போம், இடையிலெழும்
தொல்லைகள் நம் காலில் தூசு!

## (வேண்டாம்)

26. நாடுண்டு நாமுள்ளோம், நல்லபுகழுடையோம்!
வீடுண்டு பூமி விளைவுண்டு! - ஏடுண்டு
தண்டமிழில் ஏராளம்! தாரளாம் இவ்வளவும்!
நண்டெழுத்து வேண்டாம் நமக்கு!

## (குப்பை)

27. முப்பை இருந்தாலும் முழுதுங்கடைந்திடலாம்
குப்பைத்தனிக்கீரை குண்டானில்!-உப்பொன்றே
போதும், எலுமிச்சம் புளியுங்கிடைத்திட்டால்
ஏதுங்குறையே இலை!

## (அகத்தி)

28. அகத்தியின் பூவென்றால் அழகான நற்கடையல்!
அகத்தி இலையென்றால் அழகாணம்! - அகத்துவளர்
பேரகத்தி தன்னோடு பேர்சிற்றகத்தியாம்
ஈரகத்திக் குண்டோ இணை?

## (சாறு)

29. சாப்பிடும் போதினிலே சமைத்த முருங்கைகாய்
சூப்பியெறிந்தால் சுவைக்காதே! - நாப்புரளச்
சப்பிப்பார் ஊறிவரும் சாற்றைச்சுவைத்துப்பார்!
அப்போது தெரியும் அருமை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (கீரை)

30. முள்ளின்முருக்கு முசுட்டை முருங்கை மர
வள்ளி பயற்றையொடு வற்றாளை - அள்ளுபசுங்
காரை கொடிப்பாலை கானாந்தி என்பனவற்றின்
கீரைக் கறிதானோ கேள்?

## (தும்பை)

31. தும்பங்காய்த்தீயலுடன் சோறுண்டெழுந்தேன் நான்!
எம்பங்கு எங்கென்றார் எல்லோரும்? - உம்பங்கும்
நானேதான் தின்றிட்டேன் நல்லசுவை என்றேனா,
போனார் பறக்கப் பொறி!

## (கானாந்தி)

32. காட்டுக்கானாந்திக் கறிக்கே உடும்பிறைச்சி
போட்டுப்பார் பின்னர் புசித்துப்பார்!-எட்டினிலும்
இல்லை இதனருமை எல்லோரும் கண்டிருக்கார்,
எல்லை இலாச் சுவையே இது!

## (திராய்)

33. நண்டுச்சதை எடுத்து நாலுதிராய் உருவிச்
சுண்டி எடுத்துச் சுடுசோற்றோ - டுண்டவருக்
கென்ன குறைகள் இருந்தாலுமில்லையெனச்
சொன்னாற் பிழையாமோசொல்?

## (குறிஞ்சா)

34. ஆய்ந்தே அடுக்கி அரிந்தே குறிஞ்சாவைத்
தோய்ந்த பாற்றேங்காய்த்துருவலுடன் - தீய்ந்துவர
உண்டாலே போதுமடா! உடலில் ஒரு நோயும்
அண்டாதாமென்றே அறி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (பொரியல்)

35. தோலை உரித்தெடுத்த துண்டுக்கருவண்டன்
பாலில் பொரித்துப் பதமாக்கிக் காலையிளந்-
தென்னங்கள் உண்ணச் சிறிது கிடைக்குமெனில்
என்னென்று சொல்வோமிதை?

## (சோயா)

36. சோயாப்பெண் என்றொருவர் சொன்னார், அவட்காக
நாயாயலைந்தும் நமக்கொருத்தி - வாயாமல்
தப்பாமற்கொண்டேன் தடிப்பெண் மரவள்ளி!
இப்படித்தான் வாழ்வோ மினி!

## (வள்ளி)

37. வள்ளிபிடுங்கிஉரி! வடிவாகச்சீவிஎடு!
அள்ளி அலசி அடுப்பில்வை! கொள்ளிஎரி!
கொஞ்சம்பால் சீனி குழப்பி இறக்கிப்பார்!-
பஞ்சாய்ப் பறக்கும் பசி!

## (தூதுவளை)

38. பாதுகாப்போடும் பறித்தே பொரித்திட்ட
தூதுவளை இலைக்கும் சோற்றுக்கும்- ஏதுநிகர்?
பச்சடியாய்ச் செய்தும் பசியாறச் சாப்பிடலாம்!
வச்சால் புளி, உப்பு வாய்!

## (மச்சம்)

39. தீயல் சிறுசூடை! செங்குழம்பு நெய்த்தோலி!
காயச் சிறுகூனி-கருவண்டன்! - தோயப்பாற்
பொரியல் கவாட்டி, புதைமட்டி, நற்குறளி!
பரிசுத்தமச்ச வெண்பா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (சைவம்)

40. தீயல் பனி அவரை! சிறுகுழம்பு வெண்பாகல்!
தூய திராய்தான் சுடுசுண்டல்!-காயனைய
கிழங்கின் பொரியலொடு கிடையாமலைவாழைப்
பழஞ்சேர்ந்தசைவ வெண்பா!

## (விரதம்)

41. பள்ளி விடுமுறையிற் பாலப்பம் தேவை யெனும்
பிள்ளைகளின் பேச்சாற் பெருமடைச்சி-நள்ளிரவே
அப்பம் சுடச்சென்றாள், அன்றுவிரதம்-நாம்
தப்பியது போதுமேதான்!

## (சொட்டு)

42. காலை வலையப்பம்! கடியபகல் புற்சோறு!
மாலை கரும்பாண்! மறுநாளும் - வேலைஇதே!
பசும்பால் ஒரு சொட்டுப் பருகாவிடிற்போச்சு!
உசும்பாதே எங்கள் உடல்!

## (சுள்ளி)

43. நட்டேன் ஒருதோடை! நாலாறு மாதத்தில்
எட்டிலையாய் நான்காய் இரண்டாகிப்-பட்டதடா!
கொள்ளிக்கோ காகத்தின் கூட்டிற்கோ ஆகாத
சுள்ளியாம் முள்ளே துணை!

## (வளவு)

44. நாற்புறமும் பனைவேலி! நல்லதகரப்படலை!
மேற்கல்நார்வீடுமிகு தென்னை! - பாற்கிணறு!
ஈரப்பலா கமுகு இளமா எலுமிச்சை!
பாரலரி எழுவர் இதோ பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஓட்டை)

45. ஆறறையில் வீடுண்டு! ஆறேழுபேர் வந்தால்
வேறறையிலேதான் விடவேண்டும்! - கூறுகிறாள்
என்மனைவி அவ்வளவே! எங்கும் மழை ஒழுக்காம்!
பின் என்ன பேணி மயம்!

## (கரையல்)

46. சோறுகரைத்தெடுத்துத் தொண்டைகளிலூற்று மட்டும்
ஆறுதலே இல்லை அதிகாலை!- சாறாகப்
பிழிந்தே எடுத்திடுவார், பிள்ளைகளே ஒருவாறு
கழிந்தால் மறுநாளும் காண்!

## (கல்லு)

47. நெல்லோடரிசிவரும்! நீக்கி அவித்திட்டால்
கல்லோடு சோறுவரும் கட்டாயம்! - சொல்லாமல்
மெல்லுங்கால் சன்ன வெடியாய்க் கிளம்பிடுமே,
பல்லுப்பறக்கும்படி!

## (துணைவி)

48. வந்தாள் ஒரு துணைவி! வாழ்வைக்கலை யாக்கித்
தந்தாள் எனது மகள் தாய்மாமன்-சந்ததமும்
கற்பாள் பழமை கழிப்பாள் புதுமையிலே
நிற்பாள் என் கொள்கைக்குநேர்!

## (வரப்ச்சி)

49. கருத்துப்போர் செய்வதிலே கைகாரி! காரணங்கள்
பொருத்தமிலையேல் புறக்கணிப்பாள்!-வருத்தங்கள்
வந்தால் ஒருபோதும் வாய்திறவாள்! ஏனென்றால்
தந்திரங்கள் செல்லாத தால்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (பிட்டு)

50. பிட்டுண்டு சாறில்லை! பேசாமலே அதனைப்
பிட்டுண்டேன் வயிறு பெரிதாச்சு! - விட்டுடண்டு
நீருண்டேன் ஆடாமல் நின்றிடவே முடியாதே
ஆருண்டு பார்ப்பதற் காள்?

## (தாய்)

51. அப்பன் பிரிவுதனை அன்றே மறப்பித்தாய்!
இப்போதேன் சென்றாய் எமைவிட்டே? - தப்பாமல்
வேளாண்மை செய்தாயே, வீடேவயலாகத்
தாளாண்மை செய்தாயே தாய்!

## (ஆவி)

52. சிறுகட்டிதான் அறுவை செய்திடலாமென்றாரே!
மறுபேச்சே இன்றி மனமொத்தே -உறுதுயரம்-
தீர்க்க விழைந்தோமே! செங்குருதி தந்தோமே!
போக்கினரே ஆவிதான்போ!

## (சிவன்)

53. தந்தை பெயரறியான்! தான் பிறந்த நாளறியான்!
எந்தப்படிப்பும் இவனறியான்!-சொந்தத்தில்
வீடு நில மறியான்! வெளிநாடு சென்றறியான்!
தேடுங்கடவுட் சிவன்!

## (எலி)

54. கந்தன் மயில் ஆடும்! கைலாயன் மாடிழுக்கும்!
இந்தவயிறன் எலி என்செய்யும்?- பொந்தெடுக்கும்!
பயிருக்கழிவு செய்யும்! பரப்பும் பெருநோயை!
உயிருக்குவைக்கும் உலை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (நொடி)

55. கங்கைஎடு, தோலைஎடு, கதறல் ஒலி கேட்கிறது!
திங்களொடுமான்மழு வைத்தேடிப்பார்!-பொங்கரவைப்
போட்டுவிடு, தீயைஎடு, போகண்ணே காளையினை
ஓட்டிவா நொடியில் ஓடு!

## (விநாயகர்)

56 விண்ணப்பதாரி விநாயகரை மேலிடத்தார்
என்னபடித்துள்ளாய் என்றவுடன்?- அன்னாளில்
ஏதும் படிப்பில்லை என்நூல் பா ரதம் எனவே
போதும் எனச் செவி பொத்தினார்!

## (முருகன்)

57. முந்நூறு யார் ஓட முருகன் புறப்பட்டு
என்ன நடந்த திடைவழியில்? - பன்னிரண்டு
கையும் தலை ஆறும் கனபாரம் மேலாகி
ஐயோ குடை அடித்தான்!

## (கூட்டம்)

58. கந்தன் மயிலேறிக் கடுகதியில் சென்றுவிட்டான்!
பிந்திவிட்டார் காளைப்பெருமானார்!-குந்திஎலி
மேலேறி வால் முறுக்கி மெதுவாக வந்தடைந்து
காலிறங்கக் கலையுங்குழு!

## (சிறை)

59. வள்ளியுடைகாலத்தில் வழக்குமன்றந்தானிருந்தால்
கள்ளன் முருகன் கடுஞ்சிறையில்! -மெள்ளவந்து-
ஆனைமுகனாரும் அருகிப்பார், ஏனென்றால்
போனவராம் உதவி புரிய!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (குறவன்)

60. ஆறுதலையிருந்தால் ஆறிரண்டு கையிருந்தால்
ஏறுகால் எவ்வாறிரண்டிருக்கும்? - கூறுகிறார்
வேளாளர் சாதி வெறியர் இவர்கள்தொழும்
ஆளார் அசற்குறவன் ஆம்!

## (சாமி)

61. ஆண்சாமி, பெண்சாமி, ஆயிரத்திலோர்சாமி,
வீண்சாமி எல்லாம் வெறுஞ்சாமி! - பூண்சாமி
கற்சாமி பொற்சாமி காணும்மடையெல்லாம்
கொற்சாமி ஆடுகோழி!

## (குடும்பம்)

62. எங்கள் குடும்பத்திற் கிப்போது நீங்கள் தரும்
பொங்கல் பசிதீர்க்கப் போதாது!-எங்களையே
பூட்டியும் வைத்து விட்டுப் பொங்கலையும் தாரீரேல்
காட்டுவோம் கைவரிசை காண்!

## (அறிவு)

63. அன்பே சிவம் என்றால் அறிவேதான் தெய்வமெனில்
பின்பேனிச்சாமிப் பெருங்கூட்டம்?-அன்போடும்
அறிவோடும் வாழ்வோரை ஆணவம் கொண்டேசின்
அறியாமை அன்றோ அது?

## (பணம்)

64. ஆடும்! இணைவோரை ஆட்டும்! கடைசிவரை
ஓடும்! பலதை உருவாக்கும்!- வேடிக்கை
காட்டும் நிறைந்தாலோ கனபாரமாயிருக்கும்!
ஓட்டியேபேணும் உயிர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (குறுமாடு)

65. தொட்டால் எழும்பிவிடும்! தூக்கி அது கண்ணில்
பட்டால்கிடந்து பதைபதைக்கும்!-விட்டாலோ
போகும் ஒருபோக்கு! போகையிலே ஏதுமெனில்
சாகும் அதற்கும் தயார்!

## (வெப்பம்)

66. வெய்யில் எரியூட்டும்! வீழும் இலை சருகாய்!
மெய்யில் வழியும் வியர்வருவி! - வையத்தே
வீசாதொருகாற்றும்! வெடிவைக்கும் ஆமணக்கு!
மாசாடா வானில் மதி!

## (தெங்கு)

67. பன்னாடைமேல் சுற்றிப் பாளைச் சிரிப்புடனே
முன்னால் குரும்பை முலை காட்டித்-தென்னையவள்
ஓலைத்தலைவிரித்தே ஒருகாலில் நிற்கின்றாள்!
மாலைப்பொழுதே மறை!

## (சிலேடை)

68. ஆக்குதலால் உலகை அழித்தலால் பேரின்பம்
தேக்குதலால் என்றும் சிறுதுயரம்-போக்குதலால்
பாரினிலே எல்லோரும் பாசமுடன் நேசிக்கும்
நேரிழையும் பணமும் நிகர்!

## (வீரம்)

69. வந்தானொருவரத்து வயிரன் மகன் வீரன்!
இந்த வரத்தென்னஎன்றேன்நான்?-முந்தியபேய்
வெள்ளியெனக்கண்டிடையில் விளையாடவந்ததுவாம்?
கொள்ளையாய் நகை கொட்டினேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (பூப்பெண்)

70. பூவிழிக்குப் பூநாசி பூக்கைக்குப் பூவின்கால்!
பூவிதழ்க்குப் பூக்கன்னம்! பூமுலைக்குப்-பூவின்நா!
பூவள்ளி வந்த பெண் புதுமைத்தமிழில் வெண்
பாவள்ளி வந்துள்ளாள் பார்!

## (கவிதை)

71. வந்தால் உடனேயே வரவேற்றுத்தாளிலிடம்
தந்தால் கவிதை! தவறுமெனில் - எந்தமுறை
கொண்டும் கவிதையினைக் கொணர்தல் இயலாது!
கண்டபடிகீறலாம் காண்!

## (ஈடிலி)

72. காலம் கிடையாது! கட்டுக்குள் நில்லாது
கோலம் பல்வாறு கொள்ளுமது!-ஞாலத்தில்
எந்தக்கலை தானும் ஈடாகமாட்டாது!
செந்தமிழ்க்கவியின்திறம்!

## (பொங்கல்)

73. நாளும் மனக்கலத்தில் நல்லெண்ணப் பால்பெய்து
ஆளும் அறிவமுதுதனை ஆக்கிக்-கேளுடனே
உண்டு துயர்போக்கி ஒன்றிப் பணியாற்றிக்
கண்டு பயனைக் களி!

## (பணி)

74. பொங்கற்புது நாளிற் புத்துணர்வு கொண்டெமது
தங்கத் தமிழ் முழக்கம் தாரணியில்-எங்கெங்கும்
கேட்கப்பணிபுரிவோம்! கேடுசூழெம் புலத்தை
மீட்கப் பணி புரிவோமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (மலை)

75. பூச்சொரியும் நீர்வீழ்ச்சி! போகும் இடமெல்லாம்
காச்சொரியும் அக்காட்சி கண்டாலே - பாச்சொரியும்!
போவாரை எல்லாம் புலவராய் மாற்றிடுவாள்,
சாவா மலை எழிற் றாய்!

## (குன்று)

76. வழிமேல் வழிஇருக்கும்! வந்தவழிகீழிருக்கும்!
விழிமேல் விழியிருக்கும் வேலாக! - அழியாத
குன்றின்மேற் குன்றிருக்கும்! குறிஞ்சிமலை நாட்டில்
என்றும் இருக்கும் இவை!

## (வானா ஆனா)

77. எழுத்துலக முன்னோடி! இனியதமிழ் ஆசான்!
பழுத்தபழம் செய்யுள் பாடுவதில்!-விழுத்தாமல்
எழுப்புமொரு வ.அ. இரத்தினமாம் மூதூரின்
பழுப்பு நிறத்தோனைப் பார்!

## (அண்ணா)

78. பார்த்தாலே போதும் படத்தினிலே அண்ணாவைக்
கோர்த்ததுபோற்கவிதை மலர்கொட்டும்!-ஆர்த்தெழுந்தே
நாடு இனம் மொழிக்கு நற்றொண்டு செய்திடவே
ஓடு எனும் அந்த உரு!

## (கவிராயர்)

79. கற்றைப்புருவங்கள்! கனல்கக்கும் கூர்விழிகள்!
நெற்றிச்சுருக்கங்கள் நீள்மூக்கு! -சற்றுந்தான்
அஞ்சாத நெஞ்சம்! அவையீர் கவியாற்றல்!
மிஞ்சுமே கவிராயர் மேல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (பெருமாள்)

80. முந்தியோ சென்றிட்டாய் முதல்வன் பதம் காணப்
பிந்திவருவேன் பெருமாளே!-எந்தனுக்கும்
அங்கோர் இடமதனை ஆயத்தம் செய்வாயேல்
இங்கோர் சுணக்கம் இரா!

## (குடிசை)

81. கோயில் எனும் பேரில் குடிசையொன்றுண்டு, அதன்
வாயில் அருகும் வரார் எவரும்?-நாயிரவும்
வவ்வால் பகலுமென வாராட்டால் பிள்ளையார்
எவ்வாறுதான் இருப்பார்?

## (தமிழன்)

82. சாமிபெயர் சொல்லிச் சாப்பாடடிப்பதுதான்
பூமியிலே தமிழன் புத்தியல்லால்-சாமிதனைக்
கும்பிடுதல் வழிபடுதல் கோயிலுக்குப் போய்வருதல்
நம்பிடுதல் உண்டாமோ நாள்?

## (கடன்)

83. பல்லைத் திறந்திடுவார் பணத்தைப்பெறுமட்டும்
சொல்லைச்சொரிப்பார் சுவையாக!-மெல்லவே
தானாய்ப் பறந்திடுவார் தாளைக்கைப்பற்றியதும்
போனால் அதே போக்குப் போ!

## (போர்)

84. கருப்போர், தொடக்கப்போர், கண்ணினாற் காணாப்போர்,
உருப்போர், ஒருதாய் உதரத்தில்-இருப்பாகி
வரும்போர்-விழும்போரே! வண்ணத்தமிழ் ஓசை
தரும்போர் குழவிப்போர் தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஊர்க்கவி)

85. காதல்அலி! வீரம் கவிராயர்! நேரான
மோதலிலே கௌரி! முறையில்லாச்-சோதனையில்
சித்திக்குரியதவம்! சிந்தப்பலவும் நான்!
தத்துவமோ தவபாலன்தான்!

## (ஆசிரியன்)

86. எந்தத் தொழிலதனை எவர் எங்கு செய்தாலும்
அந்தத் தொழில் மூலன் ஆசிரியன்!-சந்ததமும்
சமுதாயக் குழவிக்குத் தன்னையே தானீந்து
அமுதானவன்தான் அவன்!

## (வாத்தி)

87. மண்டைப்பெருவலியும் மாறாத நெஞ்சுளைவும்
தொண்டைச்சளியும் தொடர்கதையாம்!-பண்டையிலே
செய்திட்டதீவினையை தீர்க்கும்வரை வாத்திக்
குய்வுண்டோ உண்டோ உரை?

## (சட்டம்பி)

88. ஏச்சுண்டாம்! மூடர் எதிர்ப்புண்டாம்! தீயாரின்
பேச்சுண்டாம் காசும் பெருகாது!-மூச்செல்லாம்
விட்டேதமிழை விதைத்தே பயிராக்கும்
சட்டம்பிமார்கள் தமக்கு!

## (மண்)

89. சம்பந்தர் கால முதல் தமிழர் பிரதிநிதி
சம்பந்தர் நாள்வரையிற் சகலருமே-சம்பந்தப்
பட்டேவருவதனால் பற்றுதலை இம்மண்ணில்
விட்டால் எதிர்காலம் வீண்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (புயல்)

90. மட்டக்களப்பென்னும் மாநகரம் உண்மையிலே
மட்டக்களப்பாக மாறியதோ? - திட்டங்கள்
போட்டோதமிழ்மண் புதைப்பாய், புயலே நீ
காட்டாமல் மூடுவாய் க்ண்!

## (நூன்)

91. மனிதன் வருமுன்னர் மாவிலங்குவரை யாவும்
புனிதமுடனிருந்த திப்பூவில்!- அநியாயம்,
வந்தானே ஆறறிவன்! வதையே-உயிர்வதையே!
சந்தேகம் சகலர்க்கும் தான்!

## (கலப்பு)

92. கோப்பி கரிக்கட்டி! கொச்சிக்காய் செங்கட்டி!
மாப்போட்டதுவே மலைமஞ்சள்!-சாப்பாட்டு
நெய்யென்ன-பாலென்ன? நீண்டநாள்தேனென்ன?
பொய்யே கலப்படா போ!

## (வாழ்வா)

93. ஏக்கம், பெருமூச்சு, இயலா இதயத்தின்
தாக்கம், உடலின் தளர்வெல்லாம்-நோக்குங்கால்
எண்ணம் கிளம்பி வரும்! ஈரிதழும் வாய்மூடும்!
என்னப்பா வாழ்வா இது?

## (உரிமை)

94. வாக்குரிமை ஏனுனக்கு? வாலைப்பிடிப்பதற்கா?
நாக்கைப்பிடுங்கி விழு நட்டாற்றில்!-போக்கறியாப்
பேயனே, நாயே குரங்கே பெருஞ்சோற்று
வாயனே வால் தூக்கி வா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (சிறை)

95. நாட்டைமதிப்போரை நன்நோக்கமுள்ளோரை
ஏட்டுக்கோலோடும் இருப்போரைப்-பாட்டாலே
குறையாத் தமிழமுதம் கொண்டே குவிப்போரைச்
சிறை என்ன செய்யும் சிறை?

## (குறள்)

96. எந்நேரமுங் குறளை எண்ணுங்கள்! உங்கள்வாய்
எந்நேரமுங்குறளை இயம்பட்டும்!-அந்நேரம்
ஏதோதனி இன்பம் ஏற்படுதல் காண்பீர், அப்
போதே துயரெல்லாம்போம்!

## (கலைஞர்)

97. பித்தர், மலையர், பெருமூரர், முவேயோ,
நத்தும் துரையர், நமதாலர்,- முத்தரொடு
நாகர், நடராசர், நம்சச்சி நாகையா,
யோகர் கலைக்காகி யோர்!

## (இரட்டையர்)

98. பாரதியா-தாசனா? பாரிற் சிறந்தகவி
ஆரதெனவே நன் காராய்ந்து-சீருடனே
பார்க்குங்கால் முன்னாலே பாரதியே பின்தாசன்!
சேர்த்தால் இருவ்ரையும் சேர்!

## (பன்னீர்)

99. வெண்பூச்சொரியும்! விழுந்தநிலம் மணக்கும்!
கண்பார்க்குமுன்னமே கைதூக்கும்!-வெண்பாவை
நேசிக்கும் தீவானின் நீழல் வளவினது
வாசலிடைப் பன்னீர் மரம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## (மந்திரம்)

100.இருப்பின் இலையானார்! எழும்பின் முடக்கொசுவார்!
செருப்பின்றிச்செல்லின் சிவப்பெறும்பார்!-விருப்பாகப்
படுப்பின் பறநுளம்பார், பாழ்கரப்பார், நீலகண்டர்!
தடுத்துய்யும் மந்திரமே தா!

## (வாழ்க)

*" வாழ்க தமிழ் மண்ணும்-வளமார் தமிழ்மொழியும்!*
*ஆழ்க தமிழர் அடைதுயர்கள்!-வீழ்கவே*
*பொல்லா மதவெறிகள்-பொய்கள்-அநீதி! எலாம்*
*வெல்லாதேல் காடே விடு"*

A. KUGAN
78, 2nd LANE
ANANDAPURI
TRINCO





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org